www.Padasalai.Net நேர் மாவட்டம் www.CBSEtips.in

FTS

# காலாண்டுத் தேர்வு - 2023

12 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

I 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து விடையினையும் எழுதவும். 14 X 1= 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
3. "செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்" - என்னும் புறநானூற்றுப் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்பமுறை இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை
4. குழிமாற்று - இத்தொடர் குறிப்பிடுவது அ) பெருக்கல் வாய்பாடு ஆ) பின்ன எண்ணின் கீழ்த்தொகை இ) பின்ன எண்ணின் மேல்தொகை ஈ) கூட்டல் வாய்பாடு
5. ஓரசைச் சீர்கள் அ) தேமா, புளிமா ஆ) நாள், மலர் இ) கருவிளம், கூவிளம் ஈ) தேமாங்காய், புளிமாங்காய்
6. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
7. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - 1) சேர்ந்தாரைக் கொல்லி | | அ) 4,3,2,1 |
| ஆ) பயன்தூக்கார் செய்த உதவி | - 2) ஞாலத்தின் மாணப் பெரிது | | ஆ) 3,4,1,2 |
| இ) சினம் | - 3) தெய்வத்துள் வைக்கப்படும் | | இ) 1,2,3,4 |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | - 4) நன்மை கடலின் பெரிது | | ஈ) 2,3,4,1 |

8. 'இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை' - என்னும் நூலின் ஆசிரியர்
அ) வ.சுப. மாணிக்கம் ஆ) ப. சுப்பிரமணியனார் இ) மா. இராசமாணிக்கனார் ஈ) அ.கா. பெருமாள்
9. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
10. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) முரண் பண்பு ஆ) நேர்மறைப் பண்பு இ) எதிர்மறைப் பண்பு ஈ) இவை அனைத்தும்
11. 'Visa' இச்சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல்
அ) கடவுச் சீட்டு ஆ) நுழைவு இசைவு இ) கேட்புக் காசோலை ஈ) பற்றுச் சீட்டு
12. 'அடையா' இச் சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) பெயரெச்சம் ஆ) எதிர்மறைப் பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
13. 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்கினாலோ, விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோர்க்கு விதிக்கப்படும் தண்டனை அ) 5000 தண்டத்தொகை ஆ) 3 ஆண்டுகள் சிறை தண்டனை இ) 3 மாதச் சிறைத் தண்டனை ஈ) 10,000 தண்டத்தொகை
14. முன்னெழுத்து அரசன், பின்னெழுத்து தமிழ்மாதம் இக்குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்
அ) தமிழ் ஒளி ஆ) அசோகமித்திரன் இ) கோதை ஈ) அம்பை

### பகுதி - II

**பிரிவு - 1 எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. அணி இலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தின் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. மறக்கக் கூடாதது மறக்கக் கூடியது எவற்றை?
18. இடையீடு எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 X 2 = 4

19. மொழியின் இயல்பு வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுபவை யாவை?
20. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

**பிரிவு - 3 எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7 X 2 = 14

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள் வேண்டிய முயற்சிகள் யாவை?
23. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி எழுதுக. அ) செல்லிடத்து ஆ) எத்திசை
25. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும். ஆ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
ஆ) மானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

27. வெண்பாவிற்கு உரிய தளைகள் யாவை?

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக. அ) பேசுவார் ஆ) விளங்கி

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

30. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

பகுதி - III பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 X 4 = 8

31. `ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. `நெல்லின் நேரே வெண்கல் உப்பு '- இத்தொடர் வழி பண்டமாற்று வணிகத்தை விவரி.

பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2 X 4 = 8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் - விளக்கம் எழுதுக.

37. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

பிரிவு - 3 எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக. 3 X 4 = 12


39. ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் பொருத்தமான மூன்று நயங்களை எழுதுக.

*பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார்!*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்!* - **கவிமணி தேசிக விநாயகம்.**

41. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) தாமரை ஆ) கோவில் இ) வெங்காயம் ஈ) தலைமை

42. கருத்துப்படத்தை புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




43. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுடன் தொடர்புபடுத்தி எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் ***(அல்லது)*** ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

பகுதி - IV அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 3 X 6 = 18

44. அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேம்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. ***(அல்லது)***
கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து " என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***
பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.
***(அல்லது)*** கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

பகுதி - V அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

47. அ) ஒருமையுடன் ................. எனத்தொடங்கும் தெய்வமணிமாலை பாடல்.

ஆ) சினம் - என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கரூர் மாவட்டம்

## காலாண்டுத்தேர்வு - 2023

வகுப்பு - 12 | பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள் | மொத்த மதிப்பெண் – 90

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| I | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | 14 X 1 = 14 |
| 1 | இ) தொல்காப்பியம் | 1 |
| 2 | ஆ) திருமணமும் குடும்பமும் | 1 |
| 3 | இ) தாய்வழிச் சமூக முறை | 1 |
| 4 | அ) பெருக்கல் வாய்பாடு | 1 |
| 5 | ஈ) நாள், மலர் | 1 |
| 6 | ஆ) காவியம் | 1 |
| 7 | ஆ) 3 4 1 2 | 1 |
| 8 | ஈ) அ.கா.பெருமாள் | 1 |
| 9 | இ) காட்சி | 1 |
| 10 | அ) முரண் பண்பு | 1 |
| 11 | ஆ) நுழைவு இசைவு | 1 |
| 12 | ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | 1 |
| 13 | ஆ) 3 ஆண்டுகள் சிறை தண்டனை | 1 |
| 14 | இ) கோதை | 1 |
| | பகுதி – II | |
| | பிரிவு – 1<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | 3 X 2 = 6 |
| 15 | **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள்**<br>தண்டியலங்காரம், குவலயானந்தம், மாறனலங்காரம் | 2 |
| 16 | **எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்தும் விதம்**<br>❖ எதிர்பாராத நிகழ்வுகள் – ஆனந்தம், சற்று மனச்சோர்வு, அற்பத்தனம், சிறிய விழிப்புணர்வு.<br>❖ உருவகம் – அவ்வப்போது வந்துசெல்லும் விருந்தாளிகள். | 2 |
| 17 | **மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது**<br>❖ மறக்கக் கூடாதது – பிறர் செய்த நன்றியை<br>❖ மறக்கக் கூடியது – பிறர் செய்த தீமையை | 2 |

*ப.க.சுரேஷ், முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, நெரூர், கரூர் .– 9942141963*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 18 | **இடையீடு**<br>❖ இடையீடு கவிதையின் குறியீடுகள்<br>❖ கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம்<br>❖ அதனை வெளிப்படுத்தும் வண்ணம்<br>❖ எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகரின் நிலை. | 2 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 2 = 4 |
| 19 | **மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை**<br>❖ உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி, | 2 |
| 20 | **அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள்**<br>❖ தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள்<br>❖ கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள்.<br>❖ சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவை.<br>(எவையேனும் நான்கு நூல்கள் எழுதியிருப்பினும் முழுமதிப்பெண் வழங்கலாம்) | 1/2<br>1/2<br>1/2<br>1/2 |
| 21 | **கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்**<br>❖ காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869ல் உருவாக்கப்பட்டது.<br>❖ இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது. | 1<br>1 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | 7 X 2 = 14 |
| 22 | **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கும் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்**<br>❖ குறில் நெடில் வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.<br>❖ எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவம், அவை சொல்லில் வரும் இடங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.<br>❖ நகர, னகர, ணகர வேறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டும்ரகர . றகரவேறுபாடு லகர ளகர ழகர வேறுபாடு இவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும்.<br>❖ வல்லினம் மிகும் இடம், மிகா இடம் இவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் இதனால் சந்திப்பிழையைத் தவிர்க்கலாம். | 2 |

| | | |
|---|---|---|
| | ❖ வரியின் தொடக்கத்தில் புள்ளி எழுத்துக் கண்டிப்பாக வராது. இவை எழுத்துப் பிழைகளையும், சொற்பிழைகளையும் தவிர்க்கும் வழி முறைகளாம்.<br>(ஏற்புடைய நான்கு கருத்துகள் எழுதியிருப்பினும் முழுமதிப்பெண் வழங்கலாம்) | |
| 23 | **மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன**<br>• திணை<br>• பால்<br>• எண்<br>• இடம் | 2 |
| 24 | **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.**<br>அ) செல்லிடத்து – செல் + இடத்து<br>விதி 1 – தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்<br>விதி 2 – உடல் மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே<br><br>ஆ) எத்திசை – எ+ திசை<br>விதி 1 – இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | 2 |
| 25 | அ) மாற**னின்** பேச்சுத் திற**னை** யா**ரால்** வெல்ல முடியும்<br>ஆ) காலை**யில்** எழுந்து படி**த்தால்** நமக்கு நன்மை ஏற்படும். | 1<br>1 |
| 26 | அ) நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.<br>ஆ) வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன. | 1<br>1 |
| 27 | **வெண்பாவிற்குரிய தளைகள்**<br>• இயற்சீர் வெண்டளை<br>• வெண்சீர் வெண்டளை | 1<br>1 |
| 28 | **ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக**<br>அ) பேசுவார் – பேசு+வ்+ஆர்<br>பேசு – பகுதி<br>வ் –எதிர்கால இடைநிலை<br>ஆர் – படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி<br><br>ஆ) விளங்கி – விளங்கு+ இ<br>விளங்கு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | 2 |
| 29 | அ) அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே? | 1 |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ஆ) பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூன்று நாளாக சிரமப்படுகிறது. | 1 |
| 30 | ❖ திருவளர் செல்வன் என்பதே சரியான தொடராகும்.<br>❖ வினைத்தொகையில், வல்லினம் மிகாது | 1<br>1 |
| | **பகுதி – III** | |
| | **பிரிவு –1**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 4 = 8 |
| 31 | **"ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்"**<br>**இடம் :**<br>❖ 'ஓங்கலிடை' எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.<br>**பொருள் :**<br>❖ சூரியனும் தமிழும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள இருளைப் போக்கும் தன்மை வாய்ந்தன.<br>**விளக்கம்**<br>❖ சூரியன், தன் கதிர்களால் உலகில் உள்ள புற இருளைப் போக்கும். தமிழ், மக்களின் அக இருளைப் போக்கி அறியாமையை அகற்றும் சிறப்புடையது. | 2<br>1<br>1 |
| 32 | **வாடைக்காலத்தில் கோவலர்கள்**<br>❖ கோவலர்கள் தங்கியிருந்த மலையைச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.<br>❖ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய ஆநிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.<br>❖ பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.<br>❖ குளிரின் மிகுதியால் ஆயர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.<br>❖ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் நடுங்கின.<br>❖ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது குளிர்கால நள்ளிரவு. | 4 |
| 33 | **குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகள்**<br>❖ இராமன் கங்கையைக் கடக்க உதவிய வேடுவர் தலைவன் குகனுடன் சேர்ந்து உடன்பிறந்தவர்கள் ஐவராயினர்.<br>❖ கிட்கிந்தையில் சந்தித்த வானரத் தலைவன் சுக்ரீவனுடன் சேர்ந்து உடன் பிறந்தவர்கள் அறுவராயினர். | 4 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ இராவணன் சீதையைக் கடத்திவந்த செயல் பிடிக்காமல் இலங்கையை விட்டுவிட்டு அன்புகொண்டு இராமனிடம் அடைக்கலமான வீடணனோடு சேர்த்து உடன் பிறந்தவர்கள் எழுவராயினர். | |
| 34 | **"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகம்**<br>❖ பரதவர், உப்பளங்களில் உழவு செய்யாமலேயே உப்பு விளைவிப்பர்.<br>❖ அந்த வெண்ணிறக் கல் உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச் செல்வர்.<br>❖ கோடைக் காலத்தின் வெப்பத்தால் பிளவுபட்ட பாறைக் குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.<br>❖ உமணர் மகளாகிய தலைவி, "உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ " என்று கூவுகிறாள்.<br>❖ இத்தொடர் மூலம் பிறநிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர் என்பதை அறியலாம். | 4 |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | 2 X 4 = 8 |
| 35 | **பேரிடர் மேலாண்மை ஆணையம்**<br>❖ நடுவண் அரசு 2005–ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.<br>❖ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதிவிபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற உதவுகிறது.<br>❖ மாநிலம், மாவட்டம், ஊராட்சி சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது. | 2<br>1<br>1 |
| 36 | **பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம்:**<br>❖ கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து கூட்டுக் குடும்பமாக அமைந்தது.<br>❖ கணவனின் சகோதர சகோதரிகள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக இன்றைய கூட்டுக்குடும்பம் விளங்குகிறது. | 4 |

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 37 | நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் அடக்குவீர்கள்?<br>**( ஏற்புடைய நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 38 | **சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பவன**<br>❖ சென்னையின் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குதல் மிகக் கடினம்.<br>❖ இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் இன்றும் சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை.<br>❖ தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் பல பாதுகாக்கப்பட்டுள்ள – தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்),<br>❖ தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கும் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கும் பேருதவி புரியும் – எழும்பூர் அருங்காட்சியகம், புனிதசார்ஜ் கோட்டை அருங்காட்சியகம்.<br>❖ இந்தியாவின் முதல் பொதுநூலகமான – கன்னிமாரா நூலகம்.<br>❖ இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய சென்னைக்கு – திரைப்படத்தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம்.<br>ஆகியவை சென்னையின் குறிப்பிடத்தக்க அடையாளங்கள். | 4 |
| | **பிரிவு – 3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | 3 X 4 =12 |
| 39 | **அணி விளக்கம் : 2 மதிப்பெண்**<br>**சான்று :1 மதிப்பெண்**<br>**பொருத்தம் :1 மதிப்பெண்**<br>**ஏகதேச உருவக அணி**<br>**அணி விளக்கம் :**<br>ஒரு பொருளை உருவகம் செய்து, அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.<br>**சான்று: சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**<br>**ஏமப் புணையைச் சுடும்.**<br>**பொருத்தம் :**<br>**சினத்தை** நெருப்பாகவும் **இனத்தைத்** தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், **உலக வாழ்க்கையைக்** கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.<br>(ஏற்புடைய குறள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்.) | 4 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக**<br>மையக்கருத்து – பிறப்பில் அனைவரும் சமமே. செய்யும் நற்செயல்களே அவரை மதிக்கத் தக்கதாக மாற்றும்.<br>எதுகை – பிறப்பு – சிறப்பு<br>நன்மை –தின்மை<br>மோனை – பிறப்பு –பெருமை<br>சிறப்பு – செய்கை<br>நன்மை – நாடும்<br>தின்மை – தீண்ட<br>இயைபு – வாராத**ப்பா** – வேண்டும**ப்பா**<br>மேற்குலத்**தார்** – ஒண்ணா**தார்**<br>முரண் – நன்மை தின்மை<br>சந்தம் – சிந்துப்பா<br>( ஏற்புடைய நயங்கள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 1<br><br>3 |
| 41 | **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.**<br>அ) பலகை<br>**விடை – பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.**<br>**பல கைகள் இணைந்ததால் தான் வெற்றி கிடைத்தது.**<br>ஆ) தாமரை<br>**விடை – குளத்தில் தாமரை மலர்ந்திருந்தது.**<br>**காட்டில் தா மரையை (தாவுகின்ற மான்) கண்டேன்**<br>இ) கோவில்<br>**விடை – மதுரையில் முருகன் கோவில் உள்ளது.**<br>**மதுரையில் மன்னன் வாழ்ந்த கோ இல் (அரண்மனை) உள்ளது.**<br>ஈ) வெங்காயம்<br>**விடை – சமையலில் வெங்காயம் பயன்படும்.**<br>**விபத்தில் சிக்கியவனுக்கு வெம் காயம் ஏற்பட்டன.**<br>உ) தலைமை<br>**விடை – தலைமையாசிரியர் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.**<br>**என் தந்தை நரையை மறைக்க தலைக்கு மை பூசுவார்.**<br>(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 1<br><br>1<br><br>1<br><br>1 |
| 42 | கருத்துப் படம் | 4 |
| 43 | பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.<br>**பழமொழி விளக்கம் :1 மதிப்பெண்**<br>**ஏற்புடைய வாழ்க்கை நிகழ்வு : 3 மதிப்பெண்** | 1 |

ப.க.சுரேஷ், முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, நெரூர், கரூர் .– 9942141963

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்<br>(அல்லது)<br>ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.<br>**( வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்)** | 3 |
| | **பகுதி – IV** | **3 X 6 =18** |
| **44** | **அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேம்படுத்தும்**<br>❖ தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே சினம் காப்பவர்; தன் கோபம் செல்லுபடியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?<br>❖ தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்துவிட வேண்டும்.<br>❖ முகமலர்ச்சியையும் அக மகிழ்ச்சியையும் கொல்லும் சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.<br>❖ ஒருவர் தன்னைத்தான் காத்துக் கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். காக்காவிட்டால் சினம் நம்மையே அழித்துவிடும்.<br>❖ சினம் என்பது தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு. அஃது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டு அழித்துவிடும்.<br>❖ இதன்மூலம் 'சினத்தைக் காத்தலே வாழ்வு மேம்பட வழி' என்பதை முப்பால் வழி அறியலாம்.<br>**(அல்லது)**<br>**ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவன**<br>❖ எதுகை, மோனை இல்லாமல் அடியளவை அறிந்திடாமல் வார்க்கின்ற வடிவமே வசனமாகும். எதுகை, மோனை பொருந்த யாப்பிலக்கணத்திற்குள் வார்த்தைகள் அமைவதே கவிதையாகும்.<br>❖ அரிசிதான் உலையிலிட்டு ஆக்கினால் சோறாகிறது. அரும்புதான் இதழ் விரித்தபின் பூவாகிறது. அதுபோல் வசனமாகக் கையாளும் சொற்களை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவை அமையும் வகையில், அவற்றைக் கையாண்டு எழுதினால் அது கவிதையாக அமையும்.<br>❖ நன்கு பழுத்த பழமே சாறு தரும்; நீர் பாய்ந்த நிலத்தில்தான் உழவு செய்ய முடியும். அதுபோல், கவிதையிலே எழுத்திருந்தால் அசை அமையும். இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் வரும். அடியும் | 6 |

| | | | |
|---|---|---|---|
| | தொடையும் நன்கு அமைந்தால் பாக்கள் செழித்து வரும். கவிதை எழுதுபவர்கள் இவற்றை எல்லாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.<br>❖ தேமாவும் புளிமாவும் மரங்களில் மட்டுமல்ல, சீர்களிலும் காய்க்கும். ஏமாந்தால் தளை தட்டும். வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்ப்பாடுகளைக் கொண்டு முடியும். இவற்றை அறிந்தால் தெளிவான கவிதை கிடைக்கும்.<br>❖ பூ மீது வண்டு வந்து தங்குவது போல, நல்ல கவிதை தருவதால் புலவர்கள் மீது புகழ் வந்து தங்கும். சாமானிய மக்களும் அறியும் வண்ணம் கவிதைகளைத் தமிழில் படைத்து அளிக்க வேண்டும்.<br>❖ நம் முன்னோர்போல் எழுத்தெண்ணிக் கற்றால் படைக்கும் கவிதைகளில் அறமும் பொருளும் வெளிப்படும். புகழ் என்னும் சிறப்பு விளைய, நல்ல கவிதைகளை எழுத வேண்டும் எனக் கவிஞர் சுரதா கூறுகிறார். | |
| 45 | **அ) "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" – கற்பனை கலந்துரையாடல்**<br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்)<br>**(அல்லது)**<br>**ஆ) பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்கள் இடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகள்**<br>❖ கல்வி மேம்பாட்டுடன் தொடர்புடையது ஒரு நாட்டின் முன்னேற்றம். கல்வியின் நோக்கமும் அமைப்பு முறைகளும் மாற்றமடைந்தே வந்துள்ளன. இலக்கிய இலக்கணங்களும் காலநிலை வளர்ச்சியும் இவற்றைக் காட்டுகின்றன.<br>**குருகுலம்**<br>❖ நம் நாட்டில் மிகப்பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பர் . கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர்.<br>**மன்றங்கள்**<br>❖ ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும் அதை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர். அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது.<br>**பள்ளிகள்**<br>❖ மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களில் பாடசாலைகள் உண்டாயின. | 6 |

www.Padasalai.Net

- பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாட சாலைகளுக்கும் பொதுவான பெயர். பாடசாலைகள் வேறு, மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டதால் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கப்பட்டது.

**வித்யாரம்பம் அல்லது கல்வித் தொடக்கம்**

- பண்டைக் காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் வயதில் வித்யாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் அவர்களை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள். பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப்படும். ஏட்டின்மீது மஞ்சள் பூசிப் பூசித்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.

**முறைவைப்பு**

- உபாத்தியாயர் ஒன்றைச் செல்ல அதை மாணாக்கர் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறைவைப்பு' என்று கூறுவர்

**மையாடல் விழா**

- சுவடிகளில் உள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காக சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு அல்லது ஊமத்த இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைத் தடவுவார்கள்.
- இங்ஙனம் மைதடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதை 'மையாடல் விழா' என்று கூறுவர்.

**எழுத்துப் பயிற்சி**

- பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள்.
- எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல், வரிகள் கோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தனர்.

**மனனப் பயிற்சி**

- அக்காலத்துப் பாடமுறையில் அடிப்படையான நூல்கள் மனனப் பயிற்சிக்கு உதவின. தமிழில் நன்னூல், நிகண்டு, காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருக்கும்.
- கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய வாய்ப்பாடுகள் பாடமாக இருக்கும்.

**எழுத்தாணிகள்**

- ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியை ஊசி என்றனர். மடக்கெழுத்தாணி, வாரழுத்தாணி, குண்டெழுத்தாணி ஆகியவை எழுத்தாணிகளின் வகைகள் ஆகும்.

**அன்பினால் அடக்குதல்**

| | | |
|---|---|---|
| | ❖ ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தனர். அவர்களிடம் இருந்த மரியாதை மாணவர்களுக்குப் பயத்தையும் .பக்தியையும் உண்டாக்கியது<br>**வாதம் புரிதல்**<br>❖ மிகச்சிறந்த நூல் பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதம் புரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக்காஞ்சி எடுத்துக் கூறுகிறது .<br>**சாந்துணையும் கற்றல்**<br>❖ பல நூல்களையும் பள்ளிக் கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டார் பயின்று வந்தனர் என் ஒருவன் " சாந்துணையும் கல்லாதவாறு!.எனத் திருக்குறள் கூறுகிறது " கு ஆசிரியர்கள் இருந்தார்களோளங்கெங், அங்கங்கே மாணவர்கள் சென்று கற்று வந்தனர்.<br>**ஓதற்பிரிவு**<br>❖ இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கு உள்ளோர்க்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும், வாதம் புரிந்து வென்றும், தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர். தொல்காப்பியம் ஓதற்பிரிவுக்கான கால எல்லை மூன்று ஆண்டுகள் எனக் கூறுகிறது. | |
| 46 | **அ) பாரதியின் கடிதம் வாயிலாக அறிந்து கொண்ட மொழிப்பற்று , சமூகப் பற்று**<br>**மொழிப்பற்று:**<br>❖ தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ளவேண்டும்.<br>❖ தமிழில் புதியன புகுதல் வேண்டும்.<br>❖ உண்மை இன்பம் அதிகமாக வேண்டும்.<br>❖ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்ற வேண்டும்.<br>❖ பிறமொழியில் உள்ள இசை, சிற்பம், பூமி நூல்கள், வானநூல்கள் என அனைத்துத்துறை சார்ந்த நூல்களும் தமிழில் பெருக வேண்டும்.<br>**சமூகப் பற்று:**<br>❖ நம்மைவிட மெலியவருக்கு நாம் இரக்கப்பட்டு அவர்களை நமக்கு இணையானவராக ஆக்க வேண்டும்.<br>❖ அனைத்து துறையிலும் உயரவேண்டும்.<br>❖ ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று கொள்ளல் வேண்டும். | 3 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ❖ பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.<br>❖ நாட்டில் வியாபாரத்திலும், தொழிலிலும், இயந்திரத்திலும் முன்னேற்றம் வேண்டும்.<br>( அல்லது)<br>**ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன"**<br>❖ வீழும் விவசாயம் – கரைந்து போன கலைகள் – உருமாறும் கிராமங்கள் – வீட்டின் நிகழ்ச்சிகள் நகரங்களில் நடக்கின்றன – நாகரிகப் போர்வைக்குள் மறைந்து வரும் கிராமங்கள் – உயிர்த்துடிப்பு<br><br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் உரிய மதிப்பெண் வழங்கலாம்) | |
| | **பகுதி – V** | **4+2=6** |
| **47** | **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** | |
| | அ) **தெய்வமணிமாலை**<br>ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற<br>உத்தமர்தம் உறவுவேண்டும்<br>உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்<br>உறவுகல வாமைவேண்டும்<br>பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை<br>பேசா திருக்கவேண்டும்<br>பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்<br>பிடியா திருக்கவேண்டும். | 4 |
| | ஆ) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்<br>தன்னையே கொல்லும் சினம். | 2 |

www.Padasalai.Net